ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
புரட்டாசி

OCTOBER
1970



தொகுதி 32
பகுதி 10

Vol. 32
No. 10

ஆசிரியர்:
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா.

பிரகாசகர்த்தா:
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

| | |
|---|---|
| காலம் மாறுகிறது ... | 193 |
| ஸஹஸ்ரயோகம் ... | 196 |

கார்யாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

## வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

### கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44
தலைமை வைத்யர் போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ. 27
மானேஜர் (வீடு) போன் நெ. 26

**சென்னை கிளை :**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள் :**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணுகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ:

31, A. சின்னக் கடைத்தெரு,

திருச்சிராப்பள்ளி-2.

Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் தயாரித்து வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

## ஔஷத யோக ஸங்கிரஹம்

### முதல் பாகம்

பிரதி விலை ரூ. 5-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

## வாரியர்

# க்ஷீரபலா - 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினல் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினல் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 ; 12 ML. ரூ 3–75

**ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்**

### அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் திருவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்ப்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:
Musk Saffron and Ayurvedic Drugs etc.
CORRESPOND IN HINDI OR ENGLISH

Shri Markanday Musk Depot

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்ப்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

# BHANOT BROTHERS

(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

## LUDHIANA - PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்.
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

# *K. L. TALWAR & BROS.,*

MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32 | சாதாரண புரட்டாசி | பகுதி 10 |
| Vol. 32 | 1970 அக்டோபர் | No. 10 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## காலம் மாறுகிறது

அசோக வனத்தில் கடும் துக்கம் அனுபவித்துக் கொண்டு இருந்த ஸீதாதேவி பின்வருமாறு கூறுவதாக ஸ்ரீமத் ராமாயணத்தில் உள்ளது. அதாவது "உலகில் ஒருவன் ஆயுட்காலத்தில் எப்பொழுதாவது நல்லகாலமும் வரும் என்று கூறுகிறார்களே அந்தமாதிரி தனக்கும் ஏற்படும் அறிகுறி ஒன்றும் இல்லையே" என. சிறிது நேரத்தில் ஆஞ்சநேயர் காட்சி அளித்தார்

மனித வாழ்க்கை சுற்றும் சக்கிரம் போன்றது என்று மகாகவி காளிதாஸர் கூறினார். ஆங்கில வைத்யம் இந்தியாவிற்கு வந்த பிறகு நமது நாட்டுவைத்தியம் மூத்தாள் இளையாள் நிலையில் செயல் பட்டது. இளையாளிடம் மோகம் கொண்ட கணவன் மூத்தாளை நடத்துவதுபோல் நமது அரசாங்கம் நம் நாட்டு வைத்தியத்தை நடத்திவந்தது. சுயராஜ்யம் கிடைத்துப்பல

ஆண்டுகளாகியும் சுதேச வைத்ய முறைக்கும் சுதேசகலைகளுக்கும் மதிப்பும் செல்வாக்கும் தரப்படவில்லை. குதிரை கீழேதள்ளிய துடன் நிற்காமல் பள்ளமும் தோண்டியது என்பது போல் 1949 ம் ஆண்டில் ஆங்கில வைத்ய முறை ஒன்றையே ஆதரிப்பது என்றும் மத்ய மந்திரிசபை முடிவு செய்தது. இது நமது நாட்டு வைத்ய முறை வளர்ச்சிக்கு பெரும் அடியாக ஏற்பட்டது.

நமது முன்னோர்களும் தற்பொழுது இருக்கும் பிரபல நம் நாட்டுவைத்யர்களும் நமது வைத்யத்திற்கு வந்துள்ள வீழ்ச்சி யைப் போக்கி நிலைமையை உயர்த்த படாதுபாடுபட்டார்கள். அகிலபாரத ஆயுர்வேத மண்டலம், நம் மகாமண்டலம், சித்த வைத்யக்குழு முதலியன ஏற்படுத்தி நமது வைத்தியத்தின் பெருமையை உலகறிய பாடுபட்டு வருவது எல்லாவைத்தியர் களும் அறிந்த விஷயமாகும். பெரியோர்கள் செய்து வந்த முயற்சிகளால் காலம் சிறிது மாறுகிறது. நமது நாட்டு வைத்யத் திற்கு என்றே ஒரு கவுன்ஸில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது என்பதைத்தவிர நமது நாட்டு வைத்யர்களுக்கு ஆங்கில வைத்தியர்களுக்குச் சமமான அந்தஸ்து ஏற்படுத்தப்பட்டிருக் கிறது. அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத சித்த யூனனி வைத்யர் களிடம் சிகித்ஸை பெரும் அரசு ஊழியர்கள் தங்கள் சிகித்ஸைக்கு வேண்டிய செலவை அரசாங்கத்திடமிருந்து பெறலாம். நம் நாட்டு வைத்தியர்களும் ஆங்கில வைத்யர்கள்போல் வைத்ய அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கலாம். அந்த அத்தாட்சிப் பத்திரத்தை அரசு ஏற்கவேண்டும் என்றும் அரசு கூறியுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 8 கோடி இந்திய வைத்தியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது மிகவும் வர வேற்கத்தக்கது. தவிர இந்த முடிவு மாநில அரசுகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. நமது தமிழ்நாடு அரசும் நமக்கு வேண்டியவைகளைத் தானுகவே செய்ய முன்வந்துள்ளது. லட்ச ரூபாய்க்குமேல் வருமானமுள்ள கோவில்களின் நிதியிலிருந்து சித்தவைத்யசாலைகள் நிறுவ யோசித்துள்ளது. இது பன்னி ரண்டு ஹிந்துக் கோவில்களுக்குப் பொருந்தும் என்று அறநிலைய அமைச்சர் கூறியுள்ளார், தேசப்பற்றுள்ள அரசாங்கமானுல் அது செய்யவேண்டிய முக்யமான கடமை ஒன்று மீதியுள்ளது. இந்திய வைத்யக் கவுன்ஸில் என்ற தங்கள் பெயரை ஆங்கில வைத்யர்கள் மாற்றிவிட வேண்டும். இது இந்திய நாட்டு வைத்தியத்திற்கும் இந்திய நாட்டிற்கும் பெரும் அவமதிப்பாகும். காலக்ரமத்தில் நமது பெயரை பிறர் உபயோகிக்காமல் செய்ய நாம் எல்லோரும் கூடி முயற்சி செய்தால் அது நியாயமான முயற்சியாகும்.

மேலும் நமது முதலமைச்சர் பேசுகையில் நமக்கு மிகவும் ஊக்கம் ஏற்படும் வகையில் கூறியுள்ளார். அதாவது சுதேச வைத்யமுறை பிரபலமாவது, வெற்றி பெறுவது, என்பன நமது சுதேச வைத்யர்களேயே பொருத்துள்ளது. நெடுங்காலமாகப் பழக்கத்தில் இருந்து வரும் நமது வைத்ய முறையை ஒளிவு மறைவு இல்லாமல் அனைவருக்கும் கற்பிக்க தேர்ச்சி பெற்ற சுதேச வைத்யர்கள் உற்சாகத்துடன் முன்வரவேண்டும். சித்த வைத்ய முறைகளை பாடபுத்தகத்தில் சேர்க்கவேண்டும் என்றும் கூறியுள்ளார் இது அவருக்கு இந்திய வைத்ய முறையில் உள்ள பெரும் மதிப்பை வெளிப்படுத்துகிறது. ஆனால் கண்கள் இல்லாதவனை கருட விழி விழிக்கச் செய்வது போல் அரசாங்க ஆதரவு இல்லாத காலத்தில் என்ன செய்ய முடியும்? ராஜா காலஸ்ய காரணம்'' என்று தருமபுத்ரர் கூறியபடி அரசாங்கமே கை கொடுத்துப் படிப்பாளிகளை முன்னழைத்து பணி செய்யச் செய்து நல்ல பயனை உலகம் அடையுமாறு செய்யவேண்டி மேல் மேலும் ஆண்டவன் அருள் புரிவாருக.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

# ஸஹஸ்ரயோகம்

## நேத்திர ரோக சிகித்சை

1032. கசேருயஷ்டியாஹ்வாதி—கோரைக் கிழங்கு, அதிமதுரம் இவைகளை அரைத்துப் பொடிசெய்து ஒரு துணியில் கட்டி சுத்த ஜலத்தில் போட்டிருந்து ஷ ஜலத்தை எடுத்து தாரை செய்யவும். ரக்தபித்த ரோகங்கள் தீரும்.

1033. புண்டரயஷ்டிகாதி—புண்டரீகக்கரும்பு; அதிமதுரம், மஞ்சள், ஜீனி, இவைகளைத் துணியில் கட்டி முலைப்பால் அல்லது ஆட்டுப்பாலில் நனைத்து கண்ணுக்குப்பிழியவும். சூடு, வலி, சிகப்பு ஜலம் வருவது தீரும்

1034. ச்வேதலோத்திராதி—வெள்ளை லோத்திரப்பட்டை, அதிமதுரம். இவைகளைப்பொடிசெய்து துணியில் கட்டித்தாய்ப்பாலில் நனைத்து கண்ணில் பிழியவும். ரக்தபித்தாபிஷ்யந்தம். தீரும்.

1035. ஸுமன : க்ஷாரதி—ஜாதி அரும்பு, சங்கு, திரிபலை, அதிமதுரம், குருந்தொட்டிவேர், இவைகளைச் சுத்த ஜலத்தில் குளிகை செய்துபோட பித்தரக்தம் தீரும்.

1036 இந்துப்பு, திரிபலை, சுக்கு, திப்பிலி, சங்கு, கஸ்தூரி, கடல்நுரை, காவிக்கல், குங்கிலியம் இவைகளைக் குளிகைசெய்து போட கபஸம்பந்தமான கண்வியாதி தீரும்.

1037. பிரபௌண்டரீக யஷ்டியாஹ்வாதி—புண்டரீகக் கரும்பு, அதிமதுரம், மரமஞ்சள் இவை கஷாயம்செய்து புஷ்பாஞ்சனம் 500 கிராம், மிளகு 12 கிராம் இவை சேர்த்துப் பொடியாகவாவது குளிகையாகவாவது செய்து கண்ணில்போட எல்லா அபிஷ்யந்தமும் அதனால் ஏற்பட்ட சூடும், தீரும். இதற்குப் பாசுபதகுளிகை எனவும் பெயர்.

பதினெட்டுவித பில்ல ரோகங்களுக்குச் சிகித்ஸை செய்யும் பொழுது ஸ்வேதம் வமனம் விரேசனம் உரைப்பது முதலியன மிகவும் குணம் தரும். கடுக்காய் கஷாயத்தில் தகரவிதையை அரைத்துப்போட பில்லம் தீரும். எண்ணெயுடன் தேவதாரு பில்லங்களுக்கு நல்லது. துத்தகாஸ்யபலாதியும், கரஞ்ச பீஜஸ்வரஸாதிக் குழம்பும். ரஸாஞ்சனம் ஸர்ஜரஸாதியும், ஸைந்தவம் திரிபலாதியும், புஷ்பகாஸீஸமாதியும், க்ஷீரேணயஷ்டிமதுராதி

கஷாய தாரையும், நவநீதாதியும், தாளபர்படகாதியும், மரிசம்லவ ணாதியும் மரிசாமலகாதியும், நக்தமாலபலாதியும், உபயோகிக்கக் கண்ணுக்குத் தெளிவும் பார்வையும் சுத்தியும் உண்டுபண்ணும்.

1938. துத்தகஸ்யபலாதி— துத்தம் 48 கிராம் முருங்கைவிதை இருபது, காடி $1\frac{1}{2}$ லிட்டர் இவைகளை அரைத்துத் தாம்பிரப் பாத்திரத்தில் வைத்துத்தாரைசெய்ய அதிகநாளான பில்லங்களும் கடைக்கண் அரிப்பும் நீர் முதலியனவும் தீரும்,

1039. கரஞ்சபீஜஸ்வரஸாதி—புங்கம்விதை, ஜாதி அரும்பு, இவை கஷாயம் வைத்து ரஸக்கிரியை செய்துபோட பில்லம் தீரும். இமைகளில் மயிர் முளைக்கும்.

1040. ரஸாஞ்சனம் ஸர்ஜரஸாதி—ரஸாஞ்சனம், குங்கிலியம் ஜாதிப்பூ, மனோசிலை, கடல்நுரை, இந்துப்பு, காவிமண், மிளகு, அஞ்சனக்கல், இவைகளைத்தேனில் அரைத்துப்போட கொதறல், அரிப்பு, முதலியன தீரும்.

1041. சைந்தவம் திரிபலாதி—இந்துப்பு திரிபலை, திப்பிலி, கடுகுரோகிணி, சங்கு, கஸ்தூரி, தாம்பிரத்தூள், குளிகை செய்து போட பில்லம் சுக்ரம் தீரும்.

1042. புஸ்பகாஸீஸாதி—அன்னபேதி சூர்ணத்தைத் துளசி ரஸத்தால் தாம்பிரபாத்திரத்தில் பத்துநாள் பாவனைசெய்துபோட பில்லம் இமைநோய் முதலியன தீரும்.

1043. க்ஷீரேணயஷ்டீமதுகாதி—அதிமதுரம் கஷாயம்செய்து சர்க்கரை பால் சேர்த்துத்தாரைசெய்ய எல்லா வியாதியும் தீரும்.

1044. நவநீதாதி—தகரைவேரை வெங்கலப் பாத்திரத்தில் வெண்ணையால் அரைத்துப்போட்டுக்கிளரி கண்களில் போட உரையும்பொழுது வரும் ஜலம் நிற்கும்.

1045. தாளபர்படாதி—பனைமட்டை ரஸம், பர்படகஷாயம், கொஞ்சம் பச்சைகர்ப்பூரம், சேர்த்துத்தாரைசெய்ய எல்லா வியாதியும் தீரும்

1046. மரிசம்லவணாதி (விமலகுளிகை) மிளகு, இந்துப்பு, வசம்பு, வாய்விளங்கம் திரிபலை, இரும்புப்பொடி, அஞ்சனக்கல், சேர்த்து குளிகை செய்துபோட திமிரம் தீரும்.

1047. மரிசாமலகாதி—மிளகு, 12 கிராம், நெல்லிக்காய் 24 கிராம், புங்கம் விதை 36 கிராம், இவைகளை எலுமிச்சரஸம், கருசலாங்கண்ணிரஸம் இவைகளால் அரைத்துப்போட படலம், அரிப்பு, குத்துவலி, அர்புதம் முதலியன தீரும்.

1048. நக்தமாலபலாதி—புங்கம் விதையை நெல்லிக்காய் ரஸம், ஜாதிப்பூரஸம், இவைகளால் அரைத்துப்போட கருடன் போல் கண் பிரகாசமுண்டாகும்.

1049. ஸூர்யபிரபை — சந்தனம். இந்துப்பு, லோத்திரப் பட்டை, அரிதாரம், மனோசிலே, இவைகளைக் குளிகைசெய்து போட எல்லா கண்வியாதியும் தீரும்.

1050. சங்காதி—சங்கு கிழங்குமஞ்சள், கடுக்காய், சுக்கு, இவைகளைச் சம எடை எடுத்துச் சுத்தஜலத்தில் அரைத்துக் குளிகை செய்துபோட கண் வியாதி நீரும்.

1051. சங்கு, கடல்நுரை, இவைகளை ஆட்டுமூத்திரத்தில் அரைத்துக் குளிகைசெய்து போட நூறு வருஷத்துப்பூ கூட தீரும்.

பத்தியாபத்தியம் – பழையநெல், கோதுமை, வரகு, பாசிப் பயிறு, ரவை நெய் சாப்பிடவும். அடபதியன் இலே, ஜாங்கல மாம்ஸம், மாதுளேப்பழம், இந்துப்பு. திராக்ஷை ஓமம். சுத்தஜலம், திரிபலே, இவைகள் நல்லது. சூரிய உதயம், உச்சம், அஸ்தமனம், வெய்யில் கிரஹணம் முதலியன பார்க்கக்கூடாது, குடை, செருப்பு இல்லாமல் நடக்கக்கூடாது. அஜீரணம், அதிகச்சூடான ஆகாரம் வேகரோதம், இவை தள்ளுபடி. கால்வழியாக இரண்டு நாடிகள் தலேவரையிலும் முக்கியமாகச் செல்லுகிறபடியால் அவைகள் கண் களில் முக்கியமாக வியாபிக்கிறபடியால் காலில் செய்யும் அப்யஞ் சனம் முதலியவை அவை மூலமாக கண்களில் வியாபிக்கின்றன. காலே சதா ரக்ஷிக்கவும்.

நயனரோக சிகித்ஸை முற்றிற்று.

## கர்ணரோக நிதானம்

கர்ணரோகங்கள் மொத்தம் 25. அவைகளாவன வாதசூலம், பித்தசூலம், கபசூலம், ரக்தசூலம், ஸந்நிபாதசூலம், கர்ணநாதம், பதிரம், பிரதிநாஹம், கண்டுசோபம், பூதிகர்ணம், கிருமிகர்ணம், வித்ரதி, கர்ணார்சஸ், கர்ணசோபம், கர்ணார்புதம், கூசிகர்ணம், கர்ணபிப்பலி, விதாரீ, பாலீசோஷம், தந்திரிகா, பரிபோடம். உத்பாதம், உந்மந்தம் அல்லது கில்லிரம், துக்கவர்தனம், லேஹீ லேஹ்யம் : (அஷ்டாங்கஹிருதயத்தையொட்டியே ஸஹஸ்ர யோகத்திலும் 25 கர்ண ரோகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனால் இவற்றுள் சில நோய்களுக்கு ஸஹஸ்ரயோகத்தில் லக்ஷணங்கள் சொல்லப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. அவை களின் லக்ஷணங்களை வேறு நூல்களில் காணலாம்).

இனி காதுகளைச் சேர்ந்த வியாதிகளின் நிதானம் சுருக்க மாகச் சொல்லப்படுகிறது. அடிக்கடி குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதாலும் பெரிதான வேட்டு முதலிய சத்தங்களைக் கேட்பதாலும், அடிக்கடி காதை நோண்டி சொரிந்து வருவதாலும் திரிதோஷங்கள் கோபத்தை அடைந்து சப்தவஹங்களான 97 ஸ்ரோதஸ்ஸுகளில் (நாடிகளில்) வியாபித்து காதில் வியாதியை உண்டுபண்ணுகின்றன. தலையின் பாதிபாகம், காது, இவை களில் அதிகக் குத்துவலி, குளிர்ச்சி பக்கத்தில தட்டினால் பொறுக்க முடியாதவலி நாளடைவில் மெதுவாகப் பழுத்து சீ வெளிவருதல் இது வாதகர்ணசூல லக்ஷணம். வலியும், பழுத்தலும், ஏற்பட்டு மஞ்சள் ஜலம் வடியும். சுற்றிச்சிறிது சிறிதாகப் புண் வெடிக்கும். இது பித்தகர்ணசூல லக்ஷணம். நாள் சென்று பழுத்து வெள்ளை சீ வெளிவரும் இது கபகர்ணசூல லக்ஷணம். அடிபட்டு ஊமைக் காயம்பட்டு ரக்தம் கட்டி நாளடைவில் பித்தசூலம்போல் தெரியும். இது ரக்தசூல லக்ஷணம். அதிகவலி, ஜுரம், பலநிறமான சீ வெளிவருதல், காது கேட்காமல் போவது, இது ஸன்னிபாத கர்ணசூலலக்ஷணம். சப்தவஹங்களான நாடிகளில் வாயு சேர்ந்து, அலறுகிறது போலவும், மூளுவதுபோலவும், சங்கு போலவும், சப்தங்கள் கேட்டால் கர்ணநாதம் எனப்பெயர். வாயு சிலேஷ்மத்துடன் சேர்ந்து உரத்த சப்தங்களும் கேட்காமல் போனால் பதிரம் எனப்பெயர். வாதத்தை முன்னிட்டு கர்ணஸ்ரோ தஸ்ஸுக்களில் சிலேஷ்மம் சேர்ந்து வலியுடன் காதும் கேட்காமல் போனால் பிரதி நாஹம் எனப்பெயர். அதிகப்பிப்பு ஏற்பட்டால் கர்ணகண்டு எனப்பெயர். அதிகம் வீங்கி வலியும் ஏற்பட்டால் கர்ண சோபம் எனப்பெயர். பித்தத்தினால் பழுத்து சூட்டுடன் துர்நாற்றமான கட்டியான சீ வந்தால் பூதிகர்ணம் எனப்பெயர். வாதாதிகள் காதிற்குள் சென்று உள்சதையைக்குதற அடித்து கிருமிகள் உண்டானால் கிருமிகர்ணம் எனப்பெயர். பிப்புடன் சிரங்கும் சேர்ந்தால் கர்ணவித்ரதி எனப்பெயர். சிரங்கே காதிற் குள் அதிகவலியுடன் கிளம்பினால் கர்ணார்சஸ் எனப்பெயர். அதிக வலியுடன் சீ ஒழுகிக்கொண்டு காதுகேட்காமல் துர்நாற்றமும் கண்டால் கர்ணார்புதம் எனப்பெயர். பிப்பலீ, கூகிகர்ணம், விதாரீ, கர்ணசஷ்குலீ என நான்கு வியாதிகளும் காணப்படாத தினால் லக்ஷணம் சொல்லப்படவில்லை. (வியாதியின் லக்ஷணம் அதன்பேரினாலே விளங்கும், வாதம் நாடிகளின் உள்சென்று காதுவளையத்தை கனம் குறையும்படி (சூம்பும்படி) செய்தால்

பாளிசோஷம் எனப்பெயர். சுருங்கி கெட்டியாகக் காதுவளையம் இருந்தால் தந்திரிகா எனப்பெயர், காதுகுத்தி (பெரிய ஆபரணங்கள் போட்டுக்கொள்ளுவதற்காக) வளர்க்கும்பொழுது திடீரென்று சூடு, வீக்கம், வலி, உண்டானால் பரிபோடம் எனப்பெயர். உத்பாதம் என ஒன்று உண்டு. அனுபவத்தில் பார்க்காததால் லக்ஷணம் எழுதப்படவில்லை. காதில் ஆபரணம் போட்டுக் கொள்வதால், சுற்றிலும்புண், சிறுவெடிப்பு, வீக்கம், சூடு, முதலியன கண்டால் கல்லீரம் எனப்பெயர். இது ஸன்னிபாதத்தால் வந்தால் பாளீச்வயது எனப்பெயர் கபத்தால் அரிப்புடன் மிகவும் சிறியகிருமிகள் உண்டானால் லேஹ்யம் (லிஹ்யமெனச் சிலர்) எனப் பெயர். இவ்விதம் இருபத்தி ஐந்து காது வியாதிகளில் பிப்பிலீ கூசி கர்ணம், விதாரீ, ஸன்னிபாதசூலை இந் நான்கும் அஸாத்யம். தந்திரிகை யாப்யம். பாக்கி இருபதும நன்ருக வைத்தியம் செய்தால் சுகப்படும்.

---

## கர்ணரோக சிகித்சை

வாதசூலைக்கு ரஸோநம்ரவிபத்ரேண என்ற மருந்தும் உள்ளிகாயம் என்ற மருந்தும் காதில் பூரணம் செய்ய உதவும் அரசு, எருக்கு, பில்வம், இவைகளின் இலையை வாட்டிப் பிழிந்த ரஸத்தை இளம் சூட்டுடன் காதில் நிறுத்தவும். ராத்திரியில் பால் ஆவியால் காதுக்கு வியர்வை பிடிக்கவும். இரவு படுக்கும் பொழுது வாதஹரங்களான திரவியங்களால் செய்யப்பட்ட நெய்களைச்சாப்பிடவும். (கழுத்துக்கு மேல்பட்ட வியாதிகளுக்கு இரவு ஆகாரத்திற்கு மேல் மருநது சாப்பிட்டால் சீக்கிரம் பிடிக்கும்) காது வலியுடன் சீழ்ரும் வியாதிகளுக்கு மஹத: பஞ்சமூலஸ்யேத்யாதி தைலத்தால் பூரணம் செய்யவும் குழந்தைகளுக்கு காரணமில்லாமல் திடீரென்று காதில் சீவந்தால் வயதான பலாமரத்துக் காயின் உள்ளிருக்கும் நடுத்தண்டைத் (அதாவது பலாச்சுளைகளுக்கு ஆதாரமாக நடுவில் நீளமாக இருக்கும் தண்டு) தின்று காதில் ஊதவும். கர்ணரோகிகளுக்கு நாகராதி திரிபலாதி, அஸனபில்வாதி பிருங்காமலகாதி தைலங்கள் நல்லது. தலையை ஜலத்தில் நனைக்கக்கூடாது. பச்சை ஜலம் குடிக்கக்கூடாது பித்த கர்ண சூலைக்கு பூரணத்திற்கு ஜீவந்த்யாதி, விதார்யாதி, சிறு பஞ்சமூலத்தால், தயார்செய்த நெய் நல்லது. இந்த நெய்களை எல்லாம் திராக்ஷைப்பழம் நிறையச் சேர்த்துத் தயார்செய்யவும். அதிமதுரம், கல்கம் சேர்த்து வடித்த நெய், அதிமதுரக் கஷாயம், சீதத்திரவியங்கள் கல்கம் சேர்த்து வடித்த நெய், ஆகிய இவை

களால் பூரணம் செய்யவும், திராக்ஷை, அதிமதுரம், இவைகளைப் போட்டுக் காய்ச்சின தாய்ப்பாலால் காதில் பூரணம் செய்யவும். இவை பித்தசூலத்திற்கு நல்லது. கபசூலைக்கு தூபம், கண்டூஷம், நஸ்யம் முதலியன செய்யவும். உஷ்ணதிரவியங்களால் கர்ண பூரணம் செய்யவும். உள்ளி இஞ்சி, முருங்கைவேர், புனர்முருங்கை வேர், (கதளிவாழை என்பது மலையாளத்தில் கிடைக்கும் ஒரு விசேஷமான வாழை ஜாதி) இவை ரஸத்தைக் காதில் விடவும். எருக்கு மொக்குகளைக் கல்லில் நசுக்காமல் எண்ணெயில் தோய்த்துப் பிழிந்து மண்பொதிந்து சுட்டுப் பிழிந்து எடுத்த ரஸம் கப சூலத்திற்கு நல்லது. மூங்கில் பொரியும், ஆட்டு மூத்திரமும், சேர்த்துக்காய்ச்சின எண்ணெயைக் காதில் நிறுத்த சிலேஷ்மசூலம் தீரும். ரக்த சூலத்திற்குப் பித்த சூலத்திற்குச் சொன்னமாதிரி செய்யவும். ஸன்னிபாத சூலத்திற்கு முன் சொன்னவைகளைக் கலந்து யுக்திப்படி செய்யவும். நார்த்தம் தழைபோட்டுக் காய்ச்சின எண்ணெயும், பிரப்புத்துளிர்போட்டுக் காய்ச்சின எண்ணெயும், ஸன்னிபாதத்திற்கு நல்லது. காதில் புண்ணுக்கு ந்யக்ரோதாதி கணத்தாலும், ஸுரஸாதி கணத்தாலும் கஷாயம் செய்து நிறுத்தவும் இவைகளால் நஸ்யமும் செய்யவும். பாதிர்யம் கர்ணநாதம் இவைகளுக்கு வாதசூலைக்குப்போல் செய்யவும். சிறுகடுகெண்ணெயை வாதஹர திரவியங்கள் சேர்த்துக் காய்ச்சிக் காதில் நிறுத்தவும் கர்ணநாதம் தீரும் கண்டு, பாதிர்யம், கிருமி பூதிகர்ணம், முதலியவற்றிற்கு சுஷ்கமூலக சுண்டியாதிக்ஷாரதைலம் போடத்தீரும். முகம் பல் முதலிய வியாதிகளுக்கும் இது விசேஷ குணம் கொடுக்கும், கர்ணவித்ரதிக்கு வித்ரதி சிகித்ஸையும் செய்யவும். விதாரிகா, அர்புதம், அர்சஸ் இவைகளுக்குச் சிகித்ஸை செய்யும்பொழுது முதலில் தேத்தாங் கொட்டையை அரைத்துப்போட்டு அழுக்கைப் போக்கிச் செய்யவும். பாளிசோஷத்திற்குப் பன்றிநெய் போடவும். அரக்கு அமுக்கிராக் கிழங்கு. மெழுகு, முதலியவற்றைப் பன்றிநெய்யில் கலந்து குழம்பாக்கித் தேய்க்க பாளிசோஷம் தீரும். நெரிஞ்சாம்புளி வேரைத் தேங்காய் எண்ணெயில் அரைத்துத் தேய்த்தால் காது வளயத்தில் உள்ள புண்கள் தீரும். நடுவில் கீறி தோஷத்தை எடுத்துப் புண்ணை ஆறவைக்கவும் ஜலசூகஸ்வயம்குப்தாதி நெய் காது வளர நல்லது. பூமீகதம்பஸ்வரசேத்யாதியும் நல்லது. நவநீத வசாதியும் நல்லது. இதை முலைபெருக்க மார்பில் தேய்க்கலாம். எரும்பு, முட்டை, ஈசல், சிதள், முதலியன காதில் நுழைந்தால் கல்லுப்புபோட்டு வென்னீர் காயவைத்துச் சூடாகவிடவும். அவை செத்துப்போய் வெளிவரும்.

1052. ரஸோனம் ரவிபத்ரேணுதி—உள்ளிப்பூண்டை எருக்கிலையில் பொதிந்து மண்பொதிந்து சுட்டு அதன் ரஸத்தைக் காதில் விடவும். கர்ணசூலம் தீரும்.

1053 உள்ளிகாயமித்யாதி— உள்ளி, காயம், இவைகளை அரைத்து எருக்கிலையில் தடவி வாட்டிப் பிழிந்து எடுத்து ரஸம் விடவும்

1054 மஹத: பஞ்சமூலஸ்யேத்யாதி மஹாபஞ்சமூலத்தில் வெண்பட்டுசுற்றி எண்ணெயில் நனைத்துச்சுடல் தைலம் எடுத்துப்போட வலி முதலியன தீரும். இவ்விதம் தேவதாரத்திலும் செய்யலாம்.

1055. அர்க்கபல்லவாதி—எருக்கம்துளிரை எண்ணெயில் நனைத்து இந்துப்பும், புளியும், சேர்த்து அரைத்து கள்ளிமரத்தின் உள்வைத்து, கள்ளி இலையால் பொதிந்து புடபாகம் செய்து எடுத்த ரஸம் விடவும், சூலைதீரும்.

1056. ரஸேன பீஜபூரஸ்யேத்யாதி — மாதள நாரங்காய் ரஸம், விளாம்ரஸம் இவைகளைக் காதில் விட சீழ் தீரும்.

1057. ஸுரஸாதிகணம்—துளசி, கருந்துளசி, மணிக்கஞ்சகம், கருங்கஞ்சகம், வாய்விளங்கம், நாயுருவி, எலிக்காதுத்தழை, கூம்பிள், பொன்னுவரை, கருந்தும்பை, காரீங்கை, சிறுதேக்கு, கருக்குத்தி, முல்லை, கருந்தாளி, கொட்டக்கரந்தை, காட்டப்பை, நொங்கணும்புல், மாம்ஸி—இவைகளின் திரவத்தால் கபம் மேதஸ் கிருமி பீனஸம் முதலியன தீரும்.

(கர்ணரோக சிகித்ஸை முற்றிற்று)

## நாஸாரோக நிதானம்

குறிப்பு: நாஸாரோகங்கள் என்பது மூக்குகளில்வரும் நோய்களைக் குறிக்கும். 18 விதம். அவையாவன வாதபீநசம் பித்தபீநசம், கபபீநசம், ஸந்நிபாதபீநசம், ரக்த பீநசம், துஷ்ட பீநசம், பிருசம் க்ஷவம், நாஸா சோஷம் ஆநாஹம், நாஸாபாகம், நாஸாஸ்ராவம், அபீனஸம், தீப்தி, பூதிநாஸா, பூயரக்தம், புடகம், நாஸாஅர்சஸ், நாஸா அர்புதம்.

அதிகப்பனி, புழுதி, காற்று, இவைதாக்குவதாலும், அதிகத் தூக்கம், தலையை அதிகம் உயர்த்தியும் தாழ்த்தியும்வைத்து நித்திரைசெய்வது. இரவில் தூக்கம் விழிப்பது, வெவ்வேறு ஜலத்

தில் ஸ்நானம் செய்வது, மலமூத்திரம் அடக்குவது; இது முதலிய அபத்யங்களால் திரிதோஷங்கள் கோபித்து மூக்கை அதிகம் கனக்கச்செய்து பலவியாதிகளை உண்டுபண்ணுகின்றன. வாதகோபத்தினால் முகத்திற்கு வரட்சி, தும்மல், அதிகம் மூக்கு அடைப்பது, தலை நெற்றிக்கட்டு குத்துவலி, தணுத்தஜலம் வருதல் ஆகிய இவை வாதபீநஸ லக்ஷணம். நீர்த்தாகத்துடன் பித்தத்தினால் சிறுசிரங்குகள் உண்டாகும் அவை வரண்டு சிவந்து சூடான ஜலம் வரும் கபமும் வரும் இது பித்தபீநஸ லக்ஷணம். கபகோபத்தால் அன்னத்துவேஷம், தலைபாரம், உடம்புகனம், வாந்தி, வாய்தித்திப்பு. மூக்கு பிப்பு, வழவழப்பான ஜலம் வெளிவரும், கபமும் அதிகம் வரும் இது கபபீனஸ லக்ஷணம் எல்லா தோஷங்களும் கோபத்தை அடைந்தால் எல்லா லக்ஷணங்களும் சேர்ந்து காணப்படும். இது ஸன்னிபாத பீனஸம். ரக்தம் கோபித்து மூக்கு நாடிகளில் சென்று கண் சிவப்பாகவும், மார்பில் தடிப்பும், இந்திரியங்கள் எல்லாவற்றிலும் சூடும், சுவாசம் காசம், வாய் வரண்டுபோவது அள்ளைவலி, மூச்சு நாற்றம், நாக்கு ருசி தெரியாமை, மூக்குக்கு மணம் தெரியாமை, இவை ரக்தபீனஸலக்ஷணம் உபேக்ஷை செய்தால் இவை சௌகரியப்படாது எரிப்பு அதிகம் தீக்ஷ்ண திரவியங்களை முகர்ந்து பார்ப்பது. குச்சி, இடுக்கி முதலியனபட்டு மூக்கு எலும்பு முறிந்து போவது, அதிகம் வெய்யில்படுவது முதலியவைகளால் வாயு பிரகோபம் அடைந்து நன்கு (சிருங்காடம்) மர்ம ஸ்தானங்களில் ஒன்றுசேர்ந்து காது, நாக்கு, கண், மூக்கு, இவைகளின் துவாரங்களில் இருந்து கொண்டு அடிக்கடி தும்மலை உண்டுபண்ணும். இது பிருசம்க்ஷவம். வாயு, மூக்கு ஸ்ரோதஸ்ஸில் இருக்கும் கபத்தை சோஷிக்கச் செய்து மூக்கை அடைத்துக்கொள்ளும் இதை நாஸிகா சோஷம் என்பர். மூக்கு வீங்கிவந்தால் ஆநாஹம் எனப்பெயர். பித்தத்தால் மூக்கு பழுத்தால் நாஸாபாகம் எனப்பெயர். மூக்கிலிருந்து ஜலம் ஒழுகிக் கொண்டிருந்தால் நாஸாஸ்ராவம் எனப்பெயர் கபத்தின் வழி அடைபட்டு கறுப்பான சிரங்குகளும், தலைபாரம், இருமல், வலி இவைகளும் ஏற்பட்டு, வெள்ளாட்டு மூக்குச்சளிபோல் வந்தால் அபீனஸம் எனப்பெயர். ரக்தகோபத்தால் கறுப்பான நுரை உண்டாகும். தொட முடியாமல் வலிக்கும், இது தீப்தி அடிநாக்கு, மூக்கு மாம்ஸம் இவை கெட்டு மூச்சு துர்நாற்றத்துடன் இருந்தால், பூதிநாஸம் எனப்பெயர். அடி முதலியவற்றால் திரிதோஷங்கள் கோபத்தை அடைந்து அதிகம் மண்டைக் குத்துடன் மூக்குவழியாக ரக்தம், சீ இவை வந்தால் பூயரக்தம் எனப்பெயர். பித்தசிலேஷ்மங்கள் உள்ளில் நிறைந்து வாயு கபத்தை வளரச்செய்து மூக்கடைத்துக் கொண்டு உள்பக்கம்

புண் உண்டாகும் இதுபுடகம், சிவந்து செம்பரத்திப்பூ போல் ஆகும். இது அர்புதம். அர்சஸ்ஸுபோல் ஏற்பட்டால் நாஸார்சஸ் எனப்பெயர் இவ்விதம் மூக்கில் பதினெட்டு வியாதிகள் ஏற்படுகின்றன. இவைகளுக்கு இனிமேல் சிகித்ஸை சொல்லப்படுகிறது.

பீனஸம் முழுவதும் யாப்யம் தான். நிதானத்தை வர்ஜிப்பது தான் முக்கியமான சிகித்ஸை. தலைக்குத் திரிபலாதி தைலம், பிருங்காமலகாதி, அஸனவில்வாதி சந்தனாதி, நாகராதி, முதலியன நல்லது. இந்தத் தைலங்களால் கண்டூஷம், நஸ்யம் செய்வதும் நல்லது. அதிமதுரம், திரிகடு, திரிபலை, இவை ஏழும் பொடித்து கர்ப்பூரம் சேர்த்து உச்சியில் போட்டு காற்றுப்படாமல் குல்லாவைத்துக்கட்டவும். லகுவாயும் புளிப்பாயும் எண்ணைப் பசையுள்ளதாயும் இருக்கும் அன்னத்தைக் கட்டியாக உருட்டிக் கொண்டு கொஞ்சமாகச் சாப்பிடவேண்டும். பச்சை ஜலம் சாப்பிடக்கூடாது. ஜாங்கலமாம்ஸங்கள், ஆலம்விழுது, பாசிப் பயறு, சர்க்கரை, திரிகடு, கோதுமை, மாதளம்பழம், தேன், பழைய கள்ளு, முருங்கை ரஸம், தசமூலகஷாயம் இவைகள் பீனஸ வியாதியுள்ளவர்களுக்கு குணம் தரக்கூடியவை. வாதபீனஸத்தில் வியோஷாதிவடகம் விதார்யாதிகண கஷாயத்தால் நஸ்யம், கண்டூஷம் எல்லாம் குணம் தரக்கூடியவை. பித்தபீனஸத்தில், மதுர சீதளமான வஸ்துக்களை உபயோகிக்கவும். தவத்வக்திரி பலாதி தைலத்தால் நஸ்யம் செய்யவும், கபபீனஸத்தில், லங்கனம், வமனம், வெள்ளைக்கடுகு அரைத்துத் தலையில் தேய்க்கவும். திரிகடு பொடித்து நஸ்யம் செய்யவும். வியோஷோகுபூககிருமிஜிதாதி புகையும் குணம் கொடுக்கும். தீக்ஷ்ணங்களான சூர்ணம் நஸ்யம், தூமம் முதலியன பிரசக்ஷவம், முதலியவைகளில் குணம் கொடுக்கும். சுண்டீ குஷ்டாதி தைலத்தால் நஸ்யம் இந்த நெய்யாலும் நஸ்யம் செய்யவும். நாஸாசோஷத்தில் பலா தைலம் தேய்த்துப் புகைபிடிக்கவும். இதையே நஸ்யம் செய்யவும். ஸ்நிக்தமாகச்செய்து ஸ்வேதம் செய்ய ஆநாஹம் தீரும். பாகம் விதக்தம் இவையில் பித்த சிகித்ஸை செய்யவும். தீக்ஷ்ணங்களான நஸ்யம் முதலியதால் நாஸாஸ்ராவத்தைப்போக்கவும் பூதிநாஸத்தில் கபஹரமான சிகித்ஸை செய்யவும். சுக்குளிம்ஹியாதி தைலத்தால் நஸ்யம் செய்யவும். பூயரக்தத்திற்குக் கூடியமட்டில் சீத சிகித்ஸை நல்லது. அர்சஸ், வித்ரதி, அர்புதம் இம்மூன்றிலும் புருப்பட்டை (இது ஒரு மரம்) மஞ்சள் அதிமதுரம், கடுக்காய், இரும்பு, காரீயம், வசம்பு, இவைகளை குளிகை செய்து தேன் சேர்த்து அரைத்து மூக்கில் தேய்க்கவும். இதனால் குணப்படாவிடில் சஸ்திரம் காய்ச்சிச் சுடவும். நிகும்பகும்பாதிவர்த்தியும் நல்லது.

1058 வியோஷாதி வடகம் - திரிகடு, தாளீசபத்திரி, செவ்வியம், நெரிஞ்சாம்புளி, அம்லவேதஸம், கொடுவேலி, ஓமம், இவை வகைக்கு 100 கிராம், ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை, இவை வகைக்கு 25 கிராம், ஜீனி 2½ கிலோ, இதை வடகம் செய்து சாப்பிட பீனஸங்களுக்கு நல்லது

1059. தவத்வக்திரிபலாதி — தவம் – (ஞமை – என மலையாளம்) லவங்கப்பட்டை, திரிபலை, விருந்ததாரகம், குமிழ். அதிமதுரம், வில்வம், இவை அரைத்துக் கலக்கி பத்து பங்கு பால் சேர்த்து அதில் ஒரு பங்கு எண்ணை கலந்து வடித்து நஸ்யம் செய்யவும்.

1060 வியோஷோரு பூககிருமிஜிதாதி — திரிகடு. ஆமணக்கு வாயுவிளங்கம் தேவதாரம். அரேணுகம். கோஷ்டம், இங்கு தீவிதை, கண்டங்கத்திரிவிதை, சிவதை. கடுகு, பீஞரி, முன்னைப்பூ, ஊகவிதை (பீலு) முருங்கைவிதை, இவை சமமெடுத்து யானை மூத்திரம். குதிரை மலத்தின் ரஸம், குதிரை மூத்திரம், இவைகளால் அரைத்து உலர்த்திப் புகைபிடிக்கவும்.

1061. சுண்டீகுஷ்டாதி — சுக்கு, கோஷ்டம், திப்பிலி, வாய்விளங்கம், திராக்ஷை, இவைகளின் கஷாயத்தாலும், கல்கத்தாலும், நெய் அல்லது எண்ணை வடித்து நஸ்யம் செய்யவும்.

1062. சிக்ருஸிம்ஹீ ஆதி — முருங்கைவிதை, கண்டங்கத்திரிவிதை, நாகதந்திவிதை, (வாளம் சேர்க்கலாம்) திரிகடு, இந்துப்பு. வாய்விளங்கம், துளஸிக்கதிர், இவைகளை அரைத்துக் குழப்பி எண்ணை வடித்து நஸ்யம் செய்யவும்

1063 நிகும்பகும்பாதி — நாகதந்தி (அல்லது வாளம்) சிவதை, இந்துப்பு, மனோசிலை, சமுத்திர உப்பு, கொடுவேலி இவைகளைத் தேன், நெய் கலந்து புகை பிடிக்கவும். வர்த்தியும் உபயோகிக்கலாம.

(நாஸாரோக சிகித்ஸை முற்றிற்று)

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele: "VENKATESH" Phone: 3923

### PRICE LIST FOR 1970

| | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pu.e Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No, 2. | ,, | 8-00 |
| Pure Pearls No. 3. | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |

PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 | per Kilo | 100-00 |
| No. 2. | ,, | 85-00 |

BHASAMS

| | | |
|---|---|---|
| Rajit Bhasam | per K. G. | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bang Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Makshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Loh Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |

PILLS (GUTTIKA)

| | | |
|---|---|---|
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | ,, | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 33-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனுனி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டி லேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள் கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலை யை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனுனி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவ மாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகி வும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.


தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ்
கோவாப்ரேடிவ் பார்மஸி
அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு. சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

IMPCOPS

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதருஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலேக்கட்டிகளை

எந்நிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma, Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.